# மடுல்ல பிரதேச சபை
# மொனராகலை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 செப்தெம்பர் 10 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஆகஸ்ட் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 நவம்பர் 23 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள எனது இவ்வறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மடுல்ல பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

12 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 31,205,229 ஆக இருந்ததுடன், பட்டோலைகளின் பிரகாரம் மீதிகள் ரூபா 16,694,875 ஆக இருந்தது.

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 63,236,059 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கிடையே 27% தொடக்கம் 347% வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டமையினால் செலவினக் கட்டுப்பாட்டின் போது பாதீடானது வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

### 2.2 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 2,087,097 ஆக இருந்ததுடன், அதற்கு நேர்ஒத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 459,063 ஆக இருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வாடகை | 2,369 | 2,805 | (436) |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 220 | 109 | 111 |
| (iii) | ஏனைய வருமானம் | 1,247 | 1,266 | (19) |

**2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

-----------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 671,770 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 491,340 |

**2.3.3 கடை வாடகை**

-------------------------

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவைக் கடை வாடகை ரூபா 169,179 ஆக இருந்தது.

**2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

--------------------------------------------------------

நீர் உத்தேசத் திட்டத்திற்காக ரூபா 95,000 பெறுமதியான மோட்டார் பம்பி மற்றும் அதற்குரிய உப பாகங்கள் என்பன மீளாய்வாண்டின் கொள்வனவின் போது கூறு விலை கோரல் கடிதத்தில் மாதிரி குறிப்பிடப்படாதிருந்ததுடன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.8.4 இன் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானம் பெறப்பட்டிருக்கவில்லை.

**2.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

--------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மடுல்ல வாராந்த சந்தை அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட 60 சீமெந்து பக்கற்றுக்கள், 6" X 9" அளவான கருங்கல் 5 கியூப், 1" அளவான 13 கியூப் கொங்கிரீட்டுக்கள், 10 மி.மீ அளவான 10 இரும்பு கம்பிகள் மற்றும் 4 கிலோகிராம் கட்டும் கம்பி என்பன சபையின் உறுப்பினர் ஒருவரினால் தனிப்பட்ட தேவைக்காக எடுத்துச் செல்லப்பட்டிருந்தாக தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் அறிக்கையிடப்பட்டிருந்தது. இந்தப் பொருட்களின் பெறுமதியை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக தலைவர் 2011 நவம்பர் 29 ஆந் திகதி எனக்கு அறிவித்திருந்தார்.

(ஆ) ரூபா 541,035 தொகையான கொள்வனவுகள் இருப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய ஊழியர் கடன் மற்றும் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 186,119 ஆக இருந்ததுடன் 01 வருட காலத்தை விஞ்சி அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 59,306 ஆக இருந்தது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) உள்ளகக் கட்டுப்பாடு